**பிரதேச அபிவிருத்தி வங்கி - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் (''வங்கி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளக கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | நிதிக்கூற்று மூடுதல் செயற்பாட்டின் போது SLFRS ஐ பின்பற்றியதன் காரணமாக விரிவான கைமுறை கணிப்பீடு செயன்முறை அவதானிக்கப்பட்டது. SLFRS கணிப்பீடுகள் தொடர்பான பதிவுகள் பொதுப் பேரேடுக்கு மாற்றியமைக்கப்படாமல் நேரடியாக நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டன. | ஆண்டு இறுதி நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தேவையான SLFRS செயற்பாடுகள் (SLFRS 16 & 09) வெளியக கணக்காய்வாளரின் அவதானிப்புக்களுடன் மேற்கொள்ளப்பட்டு இறுதி செய்யப்பட்டன. பின்னர், ஆண்டு இறுதி நிதிக்கூற்றுக்களை இறுதி செய்வதற்காக நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய நாட்குறிப்பு | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | பதிவுகள் பதிவு செய்யப்பட்டன. கணக்காய்வாளர்களிடமிருந்து நாங்கள் கருத்தைப் பெற்றவுடன், SLFRS தொடர்பான தொடர்புடைய நாட்குறிப்பு பதிவுகள் பொதுப் பேரேட்டில் பதிவு செய்யப்பட்டன. | |
| II. | தனிப்பட்ட நட்டக்கழிவு கணிப்பீட்டு பணியின் போது தனிநபர் குறிப்பிடத்தக்க கடன்களின் மத்திய பொறுப்பு அறிக்கை மற்றும் மீளாய்வு செயன்முறை காணப்படாததுடன் நட்டக்கழிவு கணிப்பீட்டு செயன்முறையில் மேலும் மேம்பாடுகள் தேவைப்பட்டன. | தனிநபர் குறிப்பிடத்தக்க கடன் வரம்பை 10 மில்லியனாக அதிகரிப்பதற்கு வங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மேலும் இது கீழ்மட்டத்திலிருந்து தகவல்களைச் சேகரிப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் குறைக்கும். மேலும், புறநிலை ஆதார மதிப்பீட்டு செயன்முறை மற்றும் காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்கள் என்பன எதிர்காலச் செயற்பாடுகளில் இடர் முகாமைத்துவ பிரிவால் சுயாதீனமாக மதிப்பிடப்படும். எனவே, எதிர்கால பணிகளில் இந்த குறைபாடு சீர்செய்யப்படும். | நட்டக்கழிவு கணிப்பீட்டு செயன்முறையின் சரியான தன்மையை கண்காணித்து உறுதி செய்வதற்கு சரியான பொறிமுறையை நிறுவுதல். |
| III. | கணக்காய்வின் போது நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதம், கணக்காய்வு கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் அடிக்கடி சீராக்கங்களை செய்தல் மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களில் பிழைகள் என்பன காணப்பட்டதுடன் வங்கியின் தனிப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை மதிப்பாய்வு செய்யாததால் இந்த பிழைகள் முக்கியமாக காணப்பட்டன. | தற்போது, உள்ளக கணக்காய்வு பிரிவு நிதிக்கூற்றுக்களை காலாண்டு அடிப்படையில் மதிப்பாய்வு செய்து வருகிறது. மேலும், இடர் முகாமைத்துவப் பிரிவுக்கும் மாதாந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மையை சுயாதீனமாக சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்கு பயனுள்ள கட்டுப்பாடுகளை நிறுவுதல். |
| IV | ஒரே விளக்கத்தின் கீழ் பல பொதுப் பேரேட்டுக் கணக்குகள் வங்கியால் உருவாக்கப்பட்டிருந்தன, அவை தொடர்புடைய பேரேட்டுக் கணக்குகளிற்கான | நிதி அறிக்கைகளின் சீரான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பொதுப் பேரேட்டுக் கணக்குகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை |

| | | |
|---|---|---|
| பதிவுகளை மேற்கொள்ளும் போது குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், சில வருமானக் கணக்குகள் தொடர்பாக எதிர்மறை மீதிகள் அவதானிக்கப்பட்டன. | நாங்கள் எடுப்போம். | எடுத்தல். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது ஏடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | தொங்கல்-கொவிட் 19 கணக்கில் வட்டியை கணக்கிணக்கம் செய்வதற்கு வங்கியால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 557,059,726 தொகையை கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைப்பதன் மூலமும், கடன்பட்டோர் கணக்கிற்கு ரூபா 52,457,212 தொகையை வரவு வைப்பதன் மூலமும் இக் கணக்கை வங்கி கணக்கிணக்கம் செய்திருந்தது. மேலும் வங்கியால் மேற்படி மீதி குறித்து வாடிக்கையாளர் ரீதியான பிரித்தெடுப்பிற்கான மையப்படுத்தப்பட்ட அறிக்கையை சமர்ப்பிக்க முடியவில்லை. | உரிய கிளைகளுடன் தொடர்புடைய வங்கியின் எதிர் ஒப்பந்த கணக்குகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொங்கல் கொவிட் 19 மற்றும் தொடர்புடைய பெறவேண்டிய கணக்குகளில் உள்ள வட்டியை கணக்கிணக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து CBSL வழிகாட்டல்களை கடைப்பிடிக்காமல் வாடிக்கையாளர்களிடம் இருந்து அறவிடப்படும் மேலதிக வட்டியை மீள்நிரப்புச் செய்தல். |
| II. | கடன்களின் பெறவேண்டிய வட்டி தொடர்பாக பொது பேரேட்டு மீதிக்கும் நட்டக்கழிவு கணிப்பீட்டிற்காக தயாரிக்கப்பட்ட கடன்களின் பிரதான பட்டியலுக்கும் இடையில் ரூபா 5,156,027 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்கால திருத்தங்களுக்காக குறித்துக்கொள்ளப்பட்டது. | கணக்கிணக்கம் செய்யப்படாத ஏடுகளை மேலதிக தாமதமின்றி இணக்கம் செய்வதற்கும், பொதுப் பேரேட்டில் உள்ள மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| III. | ரூபா 2,591,875 கூட்டுமொத்தமான 94 எண்ணிக்கையிலான நிலையான வைப்புக்கள் பல ஆண்டுகளாக (சுமார் 8 ஆண்டுகள் முதல் 11 ஆண்டுகள் வரை) வட்டி செலுத்தப்படாமலும் புதுப்பித்தல் இன்றியும் காணப்பட்டன. | இனங்காணப்பட்ட நிலையான வைப்புக்களை சீர்செய்து நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பிராந்திய பொது முகாமையாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த வகையான குறைபாடுகளை மேற்பார்வை செய்வதற்கு | இதுபோன்ற சிக்கல்களைக் கண்காணித்து சீர்செய்வதற்கு பயனுள்ள கட்டுப்பாடுகளை ஏற்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்பாட்டு பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | |
| IV. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் தலைமை அலுவலகத்தின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 1,684,991 செலவு மீதியொன்று அவதானிக்கப்பட்டது. | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு, முன்னாள் லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் இணைப்பின் போது எஞ்சியிருந்த GL மீதிகளிற்குரிய பெறவேண்டியவைகளின் தொகையைக் கொண்டுள்ளது. இந்த மீதிகளில் சில, முன்னாள் LDB வங்கி முறைமையில் (NTPL) நிலவிய முறைமைச் சிக்கல்களின் காரணமாக, வழக்கத்திற்கு மாறான GL மீதிகளைக் கொண்டிருக்கின்றன. இதற்காக, சொத்துக் கணக்குகளில் உள்ள வழக்கத்திற்கு மாறான புள்ளிவிபரங்களை சீர்செய்வதற்கு நாங்கள் தகவல் தொழில்நுட்ப பிரிவிடம் ஆலோசனை கேட்டுள்ளோம். எனினும், NTPL BancMate முறைமைக்கான விற்பனையாளர் ஆதரவு நிறுத்தப்பட்டதால், வெளியில் இருந்து உருவாக்கப்பட்ட தனிப்பட்ட பதிவுகளின் செல்லுபடியாகும் தன்மையை தெளிவுபடுத்த முடியாதுள்ளது என அவர்கள் கூறுகின்றனர். எனவே, கிளை இறுதி/ வாடிக்கையாளரிடம் எதிர்காலத்தில் விசாரணை இடம்பெற்றால், பதிவழிப்பை அமுல்ப்படுத்த முடியாது என்பதால், அத்தகைய மீதிகளின் கூட்டுமொத்தம் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் | மேலதிக தாமதமின்றி கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கை இணக்கம் செய்வதற்கும், உரிய கணக்கில் உள்ள மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| | கணக்கிற்கு மாற்றப்பட்டது. | |
| V. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பின்வரும் கிளைகளில் ”முற்செலுத்திய சட்டக் கட்டணங்கள்” கணக்கில் ரூபா 1,970,815 கூட்டுமொத்தமான செலவு மீதிகள் அவதானிக்கப்பட்டன. | இந்த முற்செலுத்திய சட்டக் கட்டணங்கள் கணக்குகளின் தற்போதைய செலவு மீதிகளை சீர்செய்வதற்கு அனைத்து பிராந்திய பொது முகாமையாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ் வகையான குறைபாடுகளை மேற்பார்வையிடுவதற்கு செயற்பாடுகள் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | முற்செலுத்திய சட்டக் கட்டணங்கள் கணக்கை மேலதிக தாமதமின்றி சீர்செய்வதற்கும், அந்தந்த கணக்கில் உள்ள மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| இல. | கிளை | தொகை (ரூபா) |
|---|---|---|
| 1 | புலத்சிங்கள | 317,352 |
| 2 | பாணந்துறை | 38,761 |
| 3 | மொரகஹஹேன | 13,645 |
| 4 | நீர்கொழும்பு | 168,275 |
| 5 | அம்பலாந்தோட்டை | 4250 |
| 6 | எல்பிட்டிய | 2,185 |
| 7 | பட்டபொல | 58,986 |
| 8 | கோனகலபுர | 682 |
| 9 | அம்பாந்தோட்டை | 532 |
| 10 | றன்ன | 3,701 |
| 11 | தெவலேகம | 71,743 |
| 12 | பொதுப்பிட்டிய | 1,261 |
| 13 | உவாமாலிகதென்ன | 1,329 |
| 14 | ஏறாவூர் | 117,016 |
| 15 | நிக்கவெரட்டிய | 1,935 |
| 16 | நாத்தாண்டியா | 56 |
| 17 | கிருல்ல | 142,749 |
| 18 | முந்தல் | 448,160 |
| 19 | நவகத்தேகம | 1,507 |
| 20 | மாம்புரி | 85,828 |
| 21 | பொல்பிதிகம | 377,173 |
| 22 | அம்பன்பொல | 3 |
| 23 | கல்பிட்டி | 35,964 |
| 24 | வென்னப்புவ | 50,239 |
| 25 | பொகஸ்வெவ | 27,483 |
| | **மொத்தம்** | **1,970,815** |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| I. ரூபா 10,839,246 கூட்டுமொத்தமான முற்பணக் கொடுப்பனவு மீதிகள் எந்த தீர்ப்பனவும் இல்லாமல் ஒரு வருட காலத்திற்கும் மேலாக நிலுவையாக | இக் குறைபாட்டை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பணிகள் பூர்த்தியடைந்து இறுதிக் கொடுப்பனவுகள் |

<table>
<tr>
<td></td>
<td>உள்ளன. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.<br>
<table>
<tr><th>திகதி</th><th>விபரம்</th><th>தொகை (ரூபா)</th></tr>
<tr><td>03/06/16</td><td>75% ஆலோசனை கட்டணங்கள் - 5 தளம்</td><td>56,250</td></tr>
<tr><td>19/04/2017</td><td>கம்புருபிட்டிய உள்ளக வேலைகள் - 88% கொடுப்பனவு</td><td>763,413</td></tr>
<tr><td>09/06/2020</td><td>CBS CR மாற்றங்கள் முற்பணம் 50%</td><td>1,175,498</td></tr>
<tr><td>02/07/2021</td><td>ஒப்பந்தம் கைச்சாத்திடல் நிலையில் 20% முற்பணம் மற்றும் GAP பகுப்பாய்வு & SRS ஆவணப்படுத்தலில் 10% முற்பணம்</td><td>3,780,000</td></tr>
<tr><td>மொத்தம்</td><td></td><td>5,775,161</td></tr>
</table>
</td>
<td></td>
<td>மேற்கொள்ளப்பட்ட பின்னர், முற்பணக் கொடுப்பனவை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.</td>
</tr>
<tr>
<td>II.</td>
<td>ஸ்வசக்தி மானியம், மீட்டெடுக்கக்கூடிய மீள்நிரப்பல் களஞ்சியம், முற்பணமாக செலுத்தப்பட்ட வாடகை, கடன்பட்டோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் - தலைமை அலுவலகம் ஆகியவற்றின் கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்ட மீதிகள் கணிசமான காலப்பகுதியிலிருந்து எவ்வித தீர்ப்பனவும் இல்லாமல் நிலுவையாக உள்ளன. நீண்டகாலமாக நிலுவையாக உள்ள பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு வங்கியினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்னிணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ளன.</td>
<td>பின்னிணைப்பு 01 ஐ தயவுசெய்து பார்க்கவும்.</td>
<td>மேலதிக தாமதமின்றி நீண்டகால நிலுவையாக உள்ள பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.</td>
</tr>
<tr>
<td>III.</td>
<td>ரூபா 3,084,424 தொகையான மீதி 4 ஆண்டு காலத்திற்கும் மேலாக (2018 முதல்) வரி தொடர்பாக பெறவேண்டிய கணக்கில் உள்ளது. எனவே, இந்த மீதியை அறவிடுதல் சந்தேகத்திற்குரியதாக உள்ளது.</td>
<td>சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவின் பரிந்துரைகளுடன் இந்த விடயத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.</td>
<td>மேலதிக தாமதமின்றி நீண்டகாலம் நிலுவையாக உள்ள பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.</td>
</tr>
<tr>
<td>IV.</td>
<td>ரூபா 184,384,985 கூட்டுமொத்த நிலுவை மீதியுடன் கடன்கள் மற்றும் குத்தகை வசதிகள் முறைமைக்குள் பதிவுசெய்யப்படாமல் கைமுறையாகப் பேணப்பட்டிருந்தன.</td>
<td>RDB LDB வங்கியை கையகப்படுத்தியதில் இருந்து லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியிலிருந்து பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு</td>
<td>முறைமையில் கடன்கள் மற்றும் குத்தகை வசதிகளை பதிவு செய்வதற்கு முறையான பொறிமுறையொன்</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | தரவு இடம்பெயர்ந்ததன் விளைவாக இது இடம்பெற்றுள்ளது.<br><br>குத்தகை – செயற்பாடற்ற குத்தகை பதிவு செய்யப்பட்டு கைமுறையாக பேணப்படுகிறது, ஏனெனில் தொழில்நுட்ப உதவிக்கு பெரும் தொகை பணத்தை செலுத்த வேண்டியுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட கிரயம் நியாயமானதாக இருக்கவில்லை.<br><br>SME கடன்கள்- LDB 2008 இல் SME வங்கியைக் கையகப்படுத்தியது, பின்னர் RDB LDB ஐ வாங்கியது, இதன் விளைவாக ஒரு முறைமையிலிருந்து மற்றொரு முறைமைக்கு தரவு இடம்பெயர்வது சற்று சிக்கலானதாகும். எனவே, தகவல் தொழில்நுட்ப பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இத்தகைய ஏடுகள் கைமுறையாக பேணப்படுகின்றன. | றை நிறுவுதல். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் உத்தரவாத இழப்பீட்டு மீதி ரூபா 17,685,884 ஆக இருந்ததுடன் இது நிதிக்கூற்றுக்களில் ஏனைய பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இந்த மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. ரூபா 6,538,033 பெறுமதியான கடன் உத்தரவாத இழப்பீடுகள் 2019 முதல் எந்தக் | இந்த ஆண்டின் இறுதிக்குள் இந்த விடயத்தை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | நீண்டகாலமாக செலுத்த வேண்டிய நிலுவை மீதிகளை எந்த தாமதமும் இன்றி தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் வேறுபாடுகளை கணக்கிணக்கம் செய்தலும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கல்வாங்கலும் இடம்பெறமால் அப்படியே இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| II. | பின்வரும் கிளைகளின் உரிமைகோரப்படாத மீதிகள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக (2018 ஆம் ஆண்டுக்கு முன்னர்) நிலுவையாக உள்ளன. நீண்டகாலமாக நிலுவையாக உள்ள உரிமை கோரப்படாத மீதிகளை அகற்றுவதற்கு வங்கியினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>இரத்தினபுரி 1,278,647<br>பலாங்கொடை 2,590,890<br>எம்பிலிபிட்டிய 1,743,375<br>யட்டியந்தோட்டை 3,678,537<br>ருவன்வெல்ல 1,958,491<br>மேல் மாகாணத்தின் கிளைகள் 15,097,370<br>**மொத்தம் 26,347,310** | உரிய கிளைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | மேலதிக தாமதமின்றி நீண்ட காலமாக நிலுவையாக உள்ள உரிமைகோரப்படாத மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| III. | ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் சஹானா விசேட சுழற்சி நிதியம் ஆகியவற்றின் முறையே ரூபா 4,451,392 மற்றும் ரூபா 2,705,647 மீதி 2013 மற்றும் 2014 ஆம் நிதியாண்டுகளிலிருந்து நிலுவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த ஆண்டு இறுதிக்குள் இவ் விடயத்தை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் சஹானா விசேட சுழற்சி நிதியத்தின் நீண்டகால நிலுவை மீதிகளை மேலதிக தாமதமின்றித் தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| IV. | ரூபா 21,347,832 கூட்டுமொத்தமான கடன்கொடுத்தோர் மீதிகள் கணிசமான காலத்தில் இருந்து நிலுவையாக உள்ளன. நீண்டகாலமாக நிலுவையாக உள்ள கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு வங்கியினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் குழுவின் பரிந்துரைகளுடன் இந்த நீண்டகால நிலுவையை ஈடுசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேலதிக தாமதமின்றி நீண்டகாலமாக நிலுவையாக உள்ள கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| ஆண்டு | ஒவ்வொரு வருடமும் மொத்த தீர்க்கப்படாத மீதி |
|---|---|
| 2011 | 168,976 |
| 2012 | 321,437 |
| 2013 | 574,976 |
| 2014 | 5,390,944 |
| 2015 | 3,244,902 |
| 2016 | 1,812,223 |
| 2017 | 5,542,511 |
| 2018 | 950,026 |
| 2019 | 1,797,697 |
| 2020 | 740,534 |
| 2021 | 803,606 |
| **மொத்தம்** | **21,347,832** |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| I. | 2021 செப்தெம்பர் 14 ஆம் திகதிய 2021 இன் 13 ஆம் இலக்க CBSL வழிகாட்டல்களின் 4.4 ஆம் பிரிவு | குறிப்பிடப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் உரிமம் பெற்ற விசேட வங்கிகள் அதே வங்கியால் எந்தவொரு கடன்பெறுபவருக்கும் வழங்கப்படும் எந்தவொரு கடன் வசதியையும் அறவிடுவதற்கு நிதியளிக்காது. எனினும், 2023 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 2,609,690 கூட்டுமொத்த நிலுவை மீதியுடன் 36 செயற்பாடற்ற கடன்களின் சோதனையிடப்பட்ட மாதிரி 2022 செப்தெம்பர் 30 முதல் 2022 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்குள் வங்கியால் வழங்கப்பட்ட புதிய | புதிய கடன்களைப் பயன்படுத்தி ஏற்கனவேயுள்ள செயற்பாடற்ற கடன்களைத் தீர்ப்பதற்கான CBSL இன் வழிகாட்டல்களை மீறுவது தொடர்பான கலந்துரையாடல் திணைக்களத் தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது, மேலும் அத்தகைய மீறல்களைத் தடுப்பதற்கு சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.<br><br>தொடர்புடைய பகுதிகளை உள்ளடக்கிய ஒரு சுற்றறிக்கை (2010-05) பிற்சேர்க்கை x வெளியிடப்பட்டது. | CBSL இன் குறிப்பிட்ட வழிகாட்டலுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடன்களுக்கு எதிராக தீர்ப்பனவு செய்யப்பட்டதுடன் மேற்படி வாடிக்கையாளர்களிடமிருந்து வங்கி பணத்தைப் பெற்றிருக்கவில்லை. | | |
| II. | 2006 இன் 06 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2016 இன் 01 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விடாமுயற்சி) விதி | உள்வாங்கப்படும் நேரத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட நபர்கள் அல்லது நிறுவனங்களின் பட்டியலுக்கு எதிராக தனிப்பட்ட வாடிக்கையாளர்களை கண்காணிப்பதற்கும் நியமிக்கப்பட்ட நபர்கள் அல்லது நிறுவனங்களின் தொடர்புடைய அனைத்து UNSCR பட்டியலையும் பேணுவதற்கும் அத்துடன் புதுப்பிக்கப்பட்ட நியமிக்கப்பட்ட பட்டியல்கள் உட்பட எந்தவொரு நிறுவனங்களுடனும் அல்லது தனிநபர்களுடனும் எந்தவொரு வணிக உறவும் நடாத்தப்படவில்லை அல்லது இணைக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக UNSR பட்டியல் புதுப்பிக்கப்பட்ட போது இருக்கும் வாடிக்கையாளர் தளத்தை கண்காணிப்பதற்கான எந்த வழிமுறையையும் நிறுவுவதற்கும் வங்கி தவறியிருந்தது. | இணங்கப்பட்டது, 2023 வரை AML முறைமை கிடைக்காததாலும், கைமுறையிலான செயன்முறையை மேற்கொள்வதில் உள்ள சிரமங்களாலும், வங்கி வழிகாட்டலுக்கு இணங்கும் நிலையில் இருக்கவில்லை. 2023.04.01 முதல் AML முறைமை அமுல்ப்படுத்தப்பட்டதன் மூலம், கிளை மட்டத்தின் மூலம் வாடிக்கையாளர் உள்வாங்கப்படும் நேரத்தில் நியமிக்கப்பட்ட நபர்களை வங்கியால் கண்காணிக்க முடிந்தது. மேலும், தொடர்புடைய அனைத்து UNSCR பட்டியலையும் வங்கி பேணுகிறது, மேலும் பல முயற்சிகளுக்குப் பின்னர் 2023.08.21 இல் பட்டியல் கண்காணிப்பு செயன்முறை தொடங்கப்பட்டிருந்தது. மேலும், அடகு ஏலத்தை வாங்குபவரிடமிருந்து வாடிக்கையாளர் உரிய விடாமுயற்சி (CDD) நடவடிக்கைகள் மற்றும் அடையாள ஆவணத்தைப் பெறுவதை வங்கி பேணுவதை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம். | குறிப்பிடப்பட்ட வழிகாட்டலை கடைபிடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலும், வங்கி வாடிக்கையாளருக்கு உரிய விடாமுயற்சி நடவடிக்கைகளைப் பேணுவதற்கும் அடகு ஏலத்தை வாங்குபவரிடமிருந்து அடையாள ஆவணத்தின் நகலைப் பெற்றுக்கொள்வதற்கும் தவறியிருந்தது. அதன் காரணமாக ரூபா 500,000 தண்டப்பணம் இலங்கை மத்திய வங்கியால் 2023 பெப்ரவரி 21 இல் விதிக்கப்பட்டது. | | |
| III. | அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயற்பாட்டுக் கையேடு - 2021 இன் 6.6 ஆம் பிரிவு | 2022 ஆம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டறிக்கை நிறுவனத்தைத் தெரிவுசெய்வது தொடர்பான நிர்வாகச் சிக்கல் காரணமாக வரைவு ஆண்டு அறிக்கை இறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், ஆண்டறிக்கை நிறுவனத்தைத் தெரிவுசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.<br><br>2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிநிலைகளை 2023 பெப்ரவரியின் இறுதிக்குள் இறுதி செய்து கணக்காய்வாளர்களிடம் சமர்ப்பிப்பதற்கு முன்னர் BOD இன் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தோம். எனினும், BOD வங்கிக்கு நியமிக்கப்பட்டவுடன் 2023 மார்ச் 20 இல் BOD இடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டது. | குறிப்பிட்ட வழிகாட்டலை கடைபிடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| IV | பெறுகை வழிகாட்டல் - 2006 இன் 2.1.1 ஆம் பிரிவு மற்றும் 2008 மார்ச் 17 ஆம் திகதிய பிஎவ்/429 (i) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திடம் அங்கீகாரம் பெறப்படாமல் சொந்தமாக உருவாக்கப்பட்ட பெறுகைக் கையேடு வங்கியால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அங்கீகாரம் வழங்கப்படும் வரை RDB பெறுகைக் கையேடு 2015 இற்கு பதிலாக அரசாங்க பெறுகைக் கையேடு 2006 ஐ அமுல்ப்படுத்துவதற்கு வங்கி நிர்வாகம் முடிவு செய்துள்ளது (பின்னிணைப்பு 2 ஆக இணைக்கப்பட்ட கடிதம்). 2015 இல் தயாரிக்கப்பட்ட RDB பெறுகை வழிகாட்டலுக்காக புதிதாக நியமிக்கப்பட்ட தேசிய பெறுகை ஆணைக்குழுவிடம் இருந்து அங்கீகாரம் பெறும் செயன்முறை நடைபெற்று வருகிறது. | குறிப்பிட்ட வழிகாட்டலை கடைபிடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | உழைக்கும் போதே செலுத்தும் வரி/ APIT<br><br>ஒவ்வொரு ஊழியரும் தனது இணக்கப்பாட்டுடன் வருமான வரி செலுத்த வேண்டிய ஒவ்வொரு ஊழியரின் தொழிலிலிருந்து கிடைக்கும் மிகைகள் மற்றும் இலாபத்திலிருந்து வருமான வரியைக் கழிக்க வேண்டும். 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 114 ஆம் பிரிவு, 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் (2018.04.01 முதல் அமுலுக்கு வரும்) 83 ஆம் பிரிவு, 2000 சனவரி 31 ஆம் திகதிய பிஎவ்/பிஈ/06 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | 2010 ஆம் ஆண்டு ஒரு நிறுவனத்திற்கு இணைக்கப்படுவதற்கு முன்னர் ஆறு மாகாண வங்கிகளில் உள்ள நிரந்தர ஊழியர்கள், தொழில்தருநரால் உழைக்கும் போதே செலுத்தும் வரி கூறுகள் தாங்கிக்கொள்ளப்பட்டு நலனை அனுபவித்து வந்தனர்.<br><br>மேலும், 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 45 (2) (ஈ) பிரிவு "கையளிக்கப்படும் வங்கி அல்லது வங்கிகளின் அத்தகைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் மற்றும் அன்றைய தினம் அத்தகைய கையளிக்கப்படும் வங்கி அல்லது வங்கிகளில் நிரந்தரப் பதவியில் இருந்தவர்கள் கையளிக்கப்படும் திகதிக்கு முந்திய திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், அவர்கள் வாங்கிய வங்கியுடன் முன்பு அனுபவித்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விட குறைவான | குறிப்பிட்ட வழிகாட்டலை கடைப்பிடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து அதன் பிரகாரம் வரிகளை செலுத்துதல். |

| | |
|---|---|
| என்பவற்றிற்கு முரணாக வங்கி 2022 ஆம் ஆண்டிற்கான ரூபா 43,321,736 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் (PAYE- APIT) வரியை அந்தந்த ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிப்பதற்குப் பதிலாக அதன் ஊழியர்களின் சார்பாக அதன் சொந்த நிதியிலிருந்து செலுத்தியிருந்தது. பிஈடி 03/2016 இன் பிரகாரம் SOEs இன் பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு IRD இற்கு அனுப்பப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். | சாதகமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் வேலை வழங்கப்படும்'' என்பதை குறிப்பிடுகிறது. இந்த அடிப்படையில் RDB வங்கியின் செலவினமாக ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரிப் பொறுப்பைத் தொடர்ந்து தாங்கிகொண்டு வருகிறது. மேலும், இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துடனான கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகளின் கீழ், இதே நடைமுறையைப் பின்பற்றி, ஏனைய அரச உடமையாக்கப்பட்ட வங்கிகளைப் போலவே ஊழியர்களுக்கும் வங்கி PAYE / APIT ஐ செலுத்துகிறது, மேலும் இது உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்ட நடைமுறை அல்ல. எனினும், நிதி அமைச்சின் வழிகாட்டல்களின் பிரகாரம் 2023 சனவரி முதல் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து APIT கழிக்கப்பட்டு வருகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 359,115,328 இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 775,504,600 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 416,389,332 தொகையான அல்லது 53.7 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வட்டிச் செலவினங்கள் அதிகரித்தமை மற்றும் ஆளணி செலவினங்கள் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான முக்கிய வருமான செலவின விடயங்கள் தொடர்பான பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளது.

| விபரம் | வேறுபாடு அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா மில்லியன்) | வேறுபாடு சதவீதம் | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானம் | 5,349.7 | 26.8 | மொத்தக் கடன்கள் 13 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் வட்டி விகிதங்கள் அதிகரித்தமை |
| வாடிக்கையாளர் வைப்புக்கள் மீதான வட்டிச் செலவினம் | 9,123.4 | 107.5 | வாடிக்கையாளர் வைப்புக்கள் மீதான வட்டி விகிதங்கள் அதிகரித்தமை |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

துறை விகிதங்களுடன் சேர்த்து மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் முக்கிய சில விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **துறை விகிதங்கள் (உரிமம் பெற்ற விசேட வங்கிகள்)** | **2022** | **2021** |
|---|---|---|---|
| | **சதவீதம்** | **சதவீதம்** | **சதவீதம்** |
| **<u>இலாபத்தன்மை விகிதங்கள்</u>** | | | |
| தேறிய லாப விகிதம் (PAT) | 1.16 | 3.73 | 1.25 |
| தேறிய வட்டி எல்லை | 2.05 | 6.18 | 6.08 |
| வட்டி வருமானம் மீதான தேறிய வட்டி வருமானம் | 24.39 | 44.32 | 57.98 |
| மொத்த வருமானத்திற்கான வட்டி அல்லாத வருமானம் | 1.41 | 2.57 | 3.87 |
| வட்டி வருமானத்திற்கான வட்டி கிரயம் | 75.61 | 55.68 | 42.02 |
| செயற்பாட்டு செலவினங்களுக்கான பதவியணியினர் கிரயம் | 67.10 | 76.95 | 80.1 |
| சராசரி சொத்துகள் மீதான திரும்பல் (ROA) | 0.14 | 0.51 | 0.13 |
| உரிமை மீதான திரும்பல் (ROE) | 2.32 | 8.32 | 1.99 |
| பங்கொன்றிற்கான உழைப்பு | | 2.45 | 0.56 |
| **<u>சொத்து தரம்</u>** | | | |
| செயற்பாடற்ற முற்பண விகிதம் | | | 8.71 |
| - நட்டக்கழிவிடப்பட்ட கடன்கள் (நிலை 3) விகிதம் (%) (நிலை 3 நட்டக்கழிவின் தேறியது) **(2022 முதல்)** | 9.04 | 6.53 | - |
| - நிலை 3 கடன்களிற்கான நட்டக்கழிவு (நிலை 3) விகிதம் (%) **(2022 முதல்)** | 31.36 | 31.95 | - |
| **<u>மூலதன போதுமை விகிதங்கள்</u>** | **ஆகக்குறைந்த தேவைப்பாடு** | | |
| பொதுவான மூலதன அடுக்கு I மூலதன விகிதம் | 7.5 | 8.29 | 8.72% |
| மொத்த அடுக்கு I மூலதன விகிதம் | 8.5 | 8.29 | 8.72% |
| மொத்த மூலதன விகிதம் | 12.5 | 15.22 | 14.27% |
| **<u>திரவத்தன்மை விகிதங்கள்</u>** | | | |
| நியதிச்சட்ட திரவ சொத்துக்கள் விகிதம் | 20 | 27.83 | 26.18 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| I. | லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்பட்ட பின்வரும் அருவச் சொத்துக்கள் தற்போது பயன்பாட்டில் இருக்கவில்லை. பின்னிணைப்பு | பின்னிணைப்பு 02 இல் உள்ள குறிப்பு 01 முதல் 12 வரை தயவுசெய்து பார்க்கவும். | அந்த சொத்துக்களை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கு அல்லது கைதவிப்பு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 02 இல் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. | | தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| II. | வங்கியின் பின்வரும் அருவ சொத்துக்கள் தற்போது பயன்பாட்டில் இருக்கவில்லை. பின்னிணைப்பு 03 இல் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. | பின்னிணைப்பு 03 ஐ தயவுசெய்து பார்க்கவும். | அந்த சொத்துக்களை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கு அல்லது கைதவிப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 கிளைகளில் கடன் கோவைகளின் மாதிரி பரீட்சிக்கப்பட்ட போது பின்வரும் பொதுவான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br>• புதுப்பிக்கப்பட்ட காப்புறுதிச் சான்றிதழ் காணப்படாதமை.<br>• கடன் வழங்கலுக்குப் பின்னர் பரீட்சிப்பு அறிக்கை காணப்படாதமை.<br>• கடன் விண்ணப்பத்தில் முகாமையாளரால் கையொப்பமிடப்படப்பட்டிருக்காதமை.<br>• ஆவணங்கள் காணப்படாதமை அல்லது பிரித்தெடுப்புக்கள், இரண்டாம் நிலை ஈட்டுப் பத்திரம், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சான்றிதழ், 2வது உத்தரவாததாரருக்கான படிவம் 83 மற்றும் 84, உத்தரவாததாரர் CRIB அறிக்கை, விலைப்பட்டியல் மற்றும் வழங்குநர் கொடுப்பனவுகளுக்கான சான்றுகள், மதிப்பீட்டு அறிக்கை, வருமானத்தை சரிபார்ப்பதற்கு உறுதிப்படுத்தும் ஆவணங்கள் போன்றவற்றின் முழுமையடையாத ஆவணங்கள். | கைமுறையான கடன் அங்கீகார செயன்முறையின் போது சில செயற்பாட்டு சிக்கல்கள் அவ்வப்போது நிகழலாம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், கடன் பிரிவு அத்தகைய தகவலை சீர்செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குகிறது. மேலும், கடன் உருவாக்க முறைமை (LoS) எனப்படும் புதிய கடன் அங்கீகார முறைமையை வங்கி அமுல்ப்படுத்தி வருகிறது. இது ஒரு அதிநவீன தொழில்நுட்ப அடிப்படையிலான முறைமையாகும். தெரிவுசெய்யப்பட்ட கடன் தயாரிப்புக்களுக்கு, மேல் மாகாணத்தில் LoS அமுல்ப்படுத்தப்படுகிறது. எனவே, LoS முழுமையாக அமுல்ப்படுத்தப்பட்டவுடன் இது போன்ற பிழைகள் மற்றும் விடுபடுதல்கள் தடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதுமட்டுமின்றி, கடன் கோவைகளில் கண்டறியப்பட்ட இத்தகைய குறைபாடுகளை சீர்செய்வதற்கு அனைத்து பிராந்திய பொது முகாமையாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கிளை நடவடிக்கைகளில் இனங்காணப்படும் குறைபாடுகளை சீர்செய்வதற்கான உறுதிப்படுத்தல்கள், செயற்பாடுகள் பிரிவிற்கு கிளைகள் சமர்ப்பிக்கும் மாதாந்த அறிக்கைகள் மூலம் பெறப்படுகின்றன. | அங்கீகரிக்கும் அதிகாரியின் நிபந்தனைகள், வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் கடன்களை வழங்குவதற்கும் அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். மேலும் கடன் வழங்குவதற்கு முன்னர் தேவையான அனைத்து ஆவணங்களையும் பெற்றுக்கொள்வதும் அத்தகைய ஆவணங்களின் முழுமைத்தன்மையை உறுதிப்படுத்துதலும் அவசியமாகும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 200,000 சிப் அடிப்படையிலான விசா வரவு அட்டைகளை அச்சிடுதல், தனிப்பயனாக்குதல் மற்றும் வழங்குதல்.<br><br>I. பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் (GM/CEO) பதவிக்கு பொருத்தமான மற்றும் சரியான நபரை நியமிப்பதற்கு சபை தவறும் போது அந்த நியமனம் வங்கிச் சட்டம் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தில் உள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சட்டரீதியாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்காது. எனவே, நியமனத்தில் உள்ள குறைபாடு காரணமாக GM/CEO இன் அனைத்து முடிவுகளும், ஈடுபாடுகளும் செல்லாததாகத் தெரிகிறது.<br><br>வங்கியின் பதில் பொது முகாமையாளர் 2021 நவம்பர் 25 இல் வங்கியின் தகுதி மற்றும் தனியுரிம ஏடுகளின் பிரகாரம் CBSL ஆல் வழங்கப்பட்ட தகுதி மற்றும் தனியுரிம சான்றிதழ் இல்லாமல் வங்கிகளின் வரவு அட்டை செயற்திட்டத்திற்கான அட்டை சங்கம் மற்றும் முன்மொழியப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தைத் தெரிவுசெய்வதற்கு கையொப்பமிட்டுள்ளார்.<br><br>எனவே, இந்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் முடிவும் மேற்கொள்ளப்பட்ட முற்பணக் கொடுப்பனவும் முறையானவை அல்ல. | நிதி அமைச்சிற்கு வங்கியின் முன்னாள் GM/CEO விடுவிக்கப்பட்டதன் மூலம் திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளரால் பதில் GM/CEO (திருமதி தமிதா ரத்நாயக்க) நியமிக்கப்பட்டார். மேலும் அவர் நிதி அமைச்சின் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பொறுப்பான பதவியை வகித்துள்ளார். அவரது நியமனம் நிதி அமைச்சின் செயலாளரால் செய்யப்பட்டதால், இந்த பதவிக்கு வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட உரிமை உள்ளது. மேலும், வங்கியின் பணிப்பாளர் சபை, சபை உப குழுக்கள் மற்றும் கூட்டிணைந்த முகாமைத்துவம் ஆகியவற்றின் மூலம் வங்கி தொடர்பான அனைத்து முக்கிய முடிவுகளையும் அவர் எடுத்துள்ளார்.<br><br>எனவே, இந்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கான முடிவு சட்டபூர்வமானதாக இருந்ததுடன் முற்பணக் கொடுப்பனவும் செல்லுபடியானது என நாங்கள் கருதுகிறோம். | குறிப்பிட்ட வங்கிச் சட்டம் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் வழிகாட்டல்களுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| II. பெறுகை வழிகாட்டல் 2006 இன் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதத்தை சமர்ப்பிப்பதற்கு எதிராக ஒப்பந்தத் தொகையில் 20 சதவீதம் பணிகளுக்கான எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் | CIO இன் கோரிக்கையின் அடிப்படையில் 200000 எண்ணிக்கையான சிப் அடிப்படையிலான விசா வரவு அட்டையை கொள்வனவு செய்வதற்கான கேள்விகளை பெறுகைப் பிரிவு கோரியிருந்தது. 200000 எண்ணிக்கையான சிப் | பெறுகை வழிகாட்டல் 2006 இன் குறிப்பிட்ட வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| | அதிகபட்ச முற்பணக் கொடுப்பனவாகும். ஆனால், ரூபா 103,841,836 அதாவது மொத்த செயற்திட்ட பெறுமதியில் 70 சதவீதம் தெரிவுசெய்யப்பட்ட கம்பனிக்கு 2022 ஒக்தோபர் 21 இல் 200,000 சிப் அடிப்படையிலான விசா வரவு அட்டைகளுக்கு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது, இது நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டலை மீறியதொன்றாகும். | அடிப்படையிலான விசா வரவு அட்டையின் பெறுகை வங்கியின் விசா அட்டை அமுல்ப்படுத்தல் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக வருகிறது.<br><br>பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பெறுகை பிரிவால் வழங்குவதற்கான அறிவிப்பு (பெறுகைக் கட்டளை) வழங்கப்பட்டுள்ளது, முன்மொழியப்பட்ட சேவை வழங்குனர் M/s லேக் ஹவுஸ் பிரிண்டேர்ஸ் & பப்ளிஷேர்ஸ் பிஎல்சி, கேள்வி முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஐக்கிய அமெரிக்க டொலர் தளம்பலை கருத்தில் கொண்டு மொத்த ஒப்பந்தத் தொகையின் 70% முற்பணமாக செலுத்துமாறு கோரியுள்ளது.<br><br>சேவை வழங்குநரின் கோரிக்கை மற்றும் CPC பிரதான பெறுகைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பெறுகைப் பிரிவால் 70% முற்பணக் கொடுப்பனவாக ரூபா 103,181,792.00 தொகையை விடுவிப்பதற்கு அங்கீகாரத்தை கோருவதற்காக சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2022 யூன் 27 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில், இந்த பெறுகை தொடர்பான பின்வரும் விடயங்களைப் பரிசீலித்து மேற்குறிப்பிட்ட தொகையை விடுவிப்பதற்கு அங்கீகாரம் அளித்தது.<br>(i) கடந்த சில மாதங்களில் விரைவான ஐக்கிய அமெரிக்க டொலர் தளம்பல்<br>(ii) உலகப் போர் (ரஷ்யா உக்ரைன் போர்) காரணமாக சிப் அட்டை பற்றாக்குறை<br>(iii) வங்கித் துறையில் இதே போன்ற நடைமுறைகள். |
| III. | வங்கியில் இருந்து தரவு பெறப்படும் வரை, தெரிவுசெய்யப்பட்ட கம்பனி | விசா அமுல்ப்படுத்தல் செயற்திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஐந்து |

சிப்களை வைத்திருப்பது அவதானிக்கப்பட்டது. பொறிப்புத் தரவுகளைப் பகிருமாறு லேக் ஹவுஸ் பிரிண்டேர்ஸ் பல தடவைகள் கோரிய போதிலும் வங்கி கோரியவாறு தகவல்களை அனுப்பியிருக்கவில்லை. எனவே, ஒப்பந்தத்தை பூர்த்தி செய்து, சிப்களைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்புடைய தரவுகளைப் பகிர்ந்து கொள்ளாததன் காரணம் கேள்விக்குரியதாகும்.

முக்கிய செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

(i) விசா மற்றும் RDB தொடர்பான வேலை
(ii) RDB விசா மற்றும் Nouse தொடர்பான வேலை
(iii) RDB மற்றும் முக்கிய வங்கி விற்பனையாளர் தொடர்பான வேலை
(iv) RDB மற்றும் BOC தொடர்பான வேலை
(v) RDB மற்றும் அட்டை அச்சிடுபவர் (LHP) தொடர்பான வேலை

தொற்றுநோய் மற்றும் உக்ரைன் போர் காரணமாக உலக சந்தையில் சிப்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அட்டை அச்சிடுவதற்கு சிப் ஒதுக்கீடு செய்வதில் ஏற்படும் தாமதத்தை கருத்தில் கொண்டு விரைவில் அட்டை அச்சிடும் கட்டளையை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும், தகவல் தொழில்நுட்ப பிரிவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பல காரணங்களால் ஏனைய செயலிகள் (processors) தாமதமாகின. இந்த செயலிகளில் பெரும்பாலானவை ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட தொடர் செயலிகளாக உள்ளதுடன் ஒரு செயற்பாட்டில் உள்ள தாமதம் ஏனைய செயற்பாடுகளை பாதித்து தாமதங்கள் ஒன்றுசேர்க்கப்படும்.

அட்டை அச்சிடுபவர் தனது வேலையை பூர்த்தி செய்த போதிலும், ஏனைய செயலிகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அட்டை அச்சிடும் பணியை பூர்த்தி செய்வதற்கு தகவல் தொழில்நுட்ப பிரிவால் தொடர்புடைய தரவைப் பகிர முடியவில்லை.

IV. தெரிவுசெய்யப்பட்ட கம்பனி வங்கி உத்தரவாதத்தை நீடிப்பதற்கு ரூபா 912,761

செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பிடுவதன் மூலமும், இவ் விடயம் தொடர்பான

| | |
|---|---|
| மேலதிக கிரயத்தை செலவிட வேண்டியிருந்ததுடன் தகவலை அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதால் அந்தத் தொகையை வங்கியிலிருந்து அறவிடுவதற்கு அவர்கள் கட்டாயப்படுத்தலாம். | ஆலோசனைகளைப் பெறுவதன் மூலமும், நீடிக்கப்பட்ட வங்கி உத்தரவாதத்தின் கிரயத்தை உரிய காலத்தில் செலுத்துவது அல்லது செலுத்தாதது குறித்து வங்கி பரிசீலிக்கலாம். |

## 3.4 செயற்திட்டங்களில் தாமதங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| I. | சரக்கு கட்டுப்பாட்டு முறைமையின் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு<br><br>வங்கிக்கான சரக்கு கட்டுப்பாட்டு முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்காக ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியுடன் உடன்படிக்கையை 2016 நவம்பர் 24 இல் ரூபா 1,550,000 தொகைக்கு கைச்சாத்திட்டது. உடன்படிக்கையின் 04 ஆம் இலக்க நிபந்தனை மற்றும் செயற்திட்டத்தின் காலத் திட்டத்தின் பிரகாரம் அனைத்து நிலைகளும் 81 வேலை நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ரூபா 930,000 தொகையான முற்பணக் கொடுப்பனவு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் செயற்திட்டத்தின் பூர்த்தி செய்தல் இன்னும் நிலுவையாக உள்ளது. | 2017 நவம்பரில், வங்கிக்கான "தகவல் தொழில்நுட்ப சொத்து கண்காணிப்பு முறைமை" இன் அடிப்படை பதிப்பை அமுல்ப்படுத்துதலை விற்பனையாளர் பூர்த்திசெய்தார். 2017 நவம்பர் முதல் வங்கி அனைத்து பிரிவுகள், கிளைகள், மாவட்ட அலுவலகங்கள், மாகாண அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் உள்ளிட்ட 300 இற்கும் மேற்பட்ட இடங்களில் வங்கியின் தகவல் தொழில்நுட்ப சொத்து பொருளிருப்புக்களை முகாமை செய்வதற்கு தகவல் தொழில்நுட்ப சொத்து கண்காணிப்பு முறைமையைப் பயன்படுத்துகிறது. பொருளிருப்பு செயற்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப சொத்து கண்காணிப்பு ஆகியவற்றிற்கு மேலதிகமாக வங்கியானது தகவல் தொழில்நுட்ப சொத்து வாழ்க்கை வட்டத்தை கையகப்படுத்துதல் முதல் அகற்றுதல் வரை முறைமையுடன் முகாமை செய்வதற்கு அதே முறைமையைப் பயன்படுத்துகிறது.<br><br>முறைமைக்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றியமைத்தல் மற்றும் மாற்றங்களுக்குப் பின்னர், | செயற்திட்டங்களை சரியான காலத்தில் பூர்த்தி செய்வதற்கு வங்கியின் தரப்பில் இருந்து செயற்பாடுகள் மற்றும் பயனுள்ள பின்தொடர் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்பதையும், வங்கியின் நிதிகள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| | | சில செயலாற்றல் சிக்கல்கள் மற்றும் முக்கியமற்ற பிழைகளை நாங்கள் கண்டறிந்துள்ளோம். எனவே, தீர்வுக்கான இறுதி கையொப்பத்தை தகவல் தொழில்நுட்ப பிரிவு வழங்கியிருக்கவில்லை. இந்த ஆண்டின் 2வது காலாண்டு இறுதிக்குள் இந்த அபிவிருத்தியை பூர்த்தி செய்வதற்கு விற்பனையாளர் இணங்கிக்கொண்டார். எனினும், முறைமை விற்பனையாளர் காலக்கெடுவைச் எதிர்கொள்ள தவறியிருந்தார், மேலும் அடையாளம் காணப்பட்ட சிக்கல்களைச் சீர்செய்வதற்கு வங்கியின் தகவல் தொழில்நுட்ப பிரிவுடன் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார். 2023 நவம்பரிற்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு வங்கி புதிய இலக்கு திகதியை நிர்ணயித்துள்ளது. | |
| II. | மனித வள முகாமைத்துவ முறைமைக்கான மென்பொருள் அபிவிருத்தி<br><br>2015 திசெம்பர் 17 இல் வங்கியின் மனித வள முகாமைத்துவ முறைமைக்கான மென்பொருள் உருவாக்கத்திற்காக தனியார் லிமிடட் கம்பனியுடன் ரூபா 11,250,000 ஒப்பந்தத் தொகைக்கு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கையின் 10.3 ஆம் இலக்க நிபந்தனை மற்றும் செயற்திட்டத்தின் காலத் திட்டத்தின் பிரகாரம், முழுச் செயற்திட்டமும் 2016 நவம்பர் 30 இற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், ரூபா 7,786,945 கூட்டுமொத்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு திகதியான திகதியான 2023.05.22 | தற்போது, மனித வள முகாமைத்துவ முறைமையின் 11 தொகுதிகளில் ஆறு தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள தொகுதிகளின் பூர்த்தி செய்தல் சதவீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:<br><br>1. ஆட்சேர்ப்பு மற்றும் தொழில் இணைய முகப்பு - 98% பூர்த்தியடைந்தது.<br>2. மனித வள வணிக பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் - 50% பூர்த்தியடைந்தது.<br>3. விட்டகல்தல் மற்றும் பிரித்தல் (Superannuation and Severance) - 25% பூர்துதியடைந்தது. | வங்கியின் நிதியை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| இல் அறிக்கையிடும் திகதி வரை செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை. மேற்கொள்ளப்பட்ட முற்பணக் கொடுப்பனவு ஏனைய சொத்துக் கணக்கில் இன்னும் உள்ளது. | 4. செயலாற்றல் முகாமைத்துவம் - 80% பூர்த்தியடைந்தது.<br>5. ஊழியர் இயக்கவியல் - 80% பூர்த்தியடைந்தது.<br><br>மேலே உள்ள அனைத்து தொகுதிகளும் 2023/12/31 இற்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட தொகுதிகளுடன் தொடர்புடைய தொகைகள் மைக்ரோ இமேஜுக்கு (Micro Image) செலுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள தொகை உரிய உருப்படிகளை பூர்த்தி செய்தவுடன் செலுத்தப்படும். | |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| I. 2021/2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(i) 3811 மற்றும் 3812 இன் தனிப்பட்ட கோவைகளில் உள்ள ஆவணங்களின் பிரகாரம் அந்த ஊழியர்களின் CVs சம்பந்தப்பட்ட பதவிக்கு மிகவும் பொருத்தமானதாக ஒரு அமைச்சரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.<br><br>அவர்களை வங்கியின் வைப்பு சேகரிப்பாளர்களாக சேர்ப்பதற்கு சபை மனித வளம் மற்றும் சம்பளக் குழு 2021 திசெம்பர் 21 ஆம் திகதிய கூட்டக் குறிப்பு இலக்கம் பீஎச்ஆர்ஆர்சீ/2021/எம்-05/பி19 மூலம் அங்கீகாரத்தை அளித்துள்ளது.<br><br>மேற்குறிப்பிட்ட ஆட்சேர்ப்புக்கள் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையைப் பின்பற்றாமல் சபையின் | அவர்களின் பதவிநிலைகள் வைப்பு சேகரிப்பாளர்களாக பெயரிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிடப்பட்ட ஊழியர்கள் தொழிலாளர் பிரிவில் வைக்கப்பட்டனர். கொழும்பில் உள்ள மிதக்கும் சந்தைப் பகுதி மற்றும் சுயதொழில் வர்த்தகப் பகுதி ஆகியவற்றில் வைப்பு சேகரிப்பு பணியின் முக்கியத்துவத்தையும் தேவைகளையும் கருத்தில் கொண்டு அந்த இருவரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். | விண்ணப்பதாரர்களின் திறன்களைக் கருத்தில் கொண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க மிகவும் பொருத்தமான நபரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் ஆட்சேர்ப்பு செயன்முறையில் வெளிப்படைத்தன்மையைப் பேணுதலும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுமதியின் அடிப்படையில் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| | (ii) | ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களை பணிக்கமர்த்தும் நடைமுறை, விளம்பரத்தை பிரசுரிக்கும் முறை மற்றும் பல்வேறு வகை பதவிகளுக்கான ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் நடைமுறை (உதாரணம்: சாரதிகள், உதவியாளர்கள் போன்றன) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தொழிலாளர் பிரிவு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முந்தைய சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட்ட அதே நடைமுறையை வங்கி பின்பற்றியுள்ளது. | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| II. | 2022 இல் பொது முகாமையாளர் நியமனம் | | அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டத்தில், குறைந்தபட்சத் தகைமைகளுக்கு மேல் புள்ளிகள் வழங்கப்படுகின்றதெனவும், அடிப்படை/ நுழைவுத் தேவைப்பாடுகளுக்கு எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் பிரகாரம் ஒரு விண்ணப்பதாரரர் 26(1)(அ) பிரிவுடன் தகுதி பெற்றிருந்தால், அதை இருமுறை பரிசீலிக்க முடியாது. | நேர்முகப்பரீட்சையில் கொடுக்கப்பட்ட புள்ளிகளில் இனங்காணப்பட்ட பிழைகளை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். மேலும், விண்ணப்பதாரர்களின் திறன்களைக் கருத்தில் கொண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க மிகவும் பொருத்தமான நபரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு/ பதவி உயர்வு வழங்குவதற்கு ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டியதுடன் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு செயன்முறையில் வெளிப்படைத்தன்மையைப் பேணுதல் வேண்டும். |
| | (i) | 2022 சனவரி 28 இல் நடைபெற்ற பொது முகாமையாளர் நேர்முகப்பரீட்சைக்கான புள்ளிகள் குறித்து பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் (PSB சட்டம்) பிரகாரம், மேற்கூறிய பதவிக்கான குறைந்தபட்சத் தகுதியானது வங்கியியல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் முதுகலைப் பட்டதாரி தகையை அல்லது தொழில்முறைத் தகுதியுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். எனவே, முதுகலை தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பது தொழில்முறை தகைமைக்கு சமமாக இருந்ததால், சமமான தகைமைகளுக்கு சமமான புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருக்காததால், இரண்டு தகைமைகளையும் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு | | |

| | | |
|---|---|---|
| | தொழில்முறை தகுதியை நுழைவுத் தேவைப்பாடாக வங்கி கருதியிருக்க வேண்டும். 2019 ஒக்தோபர் 02 இல் பொது முகாமையாளரை (GM) நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சைக்கும் இதே நடைமுறை பயன்படுத்தப்பட்டதுடன் இரண்டு தகைமைகளையும் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு தொழில்முறை தகுதி நுழைவுத் தேவைப்பாடாகக் கருதப்பட்டிருந்தது. எனினும், ஏனைய 2 விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் அடிப்படைத் தகைமையை தொழில்முறைத் தகைமையாகக் கருதி வங்கியால் 4 புள்ளிகள் மற்றும் 3 புள்ளிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ii) | 2022 சனவரி 12 ஆம் திகதிய 2022/2927 ஆம் இலக்க சபை பத்திரத்தின் தீர்மானத்தின் பிரகாரம், வயதுக்கான எதிர்மறை புள்ளிகளை நீக்குவதற்கும், கடந்த நேர்முகப்பரீட்சையில் பயன்படுத்தப்பட்ட முந்தைய மதிப்பெண் திட்டத்தைப் பயன்படுத்துவதற்கும் சபை முடிவு செய்திருந்தது. 2019 ஆம் ஆண்டில் முந்தைய நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரர்களின் தொழில்முறை தகைமைக்கான இணை உறுப்பினர் அல்லது சக உறுப்பினருக்கு முறையே மேலதிக 2 புள்ளிகள் அல்லது 3 புள்ளிகள் வழங்கப்பட்டன. எனினும், இந்த நேர்முகப்பரீட்சையின் போது வங்கி அத்தகைய புள்ளிகளை வழங்கியிருக்கவில்லை. | 2019 இல் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த புள்ளியிடல் திட்டத்தின் பிரகாரம் 2(ஆ) இன் கீழ் தொழில்முறை தகைமைகளுக்கு புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. |
| (iii) | புள்ளியிடல் திட்டத்தின் பிரகாரம் பட்டப்படிப்பில் ஒரு வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஒரு விண்ணப்பதாரர் கூடுதலாக 1 புள்ளியை பெறுவார். ஆனால், வகுப்புடன் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு | அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டத்தில், குறைந்தபட்சத் தகைமைகளுக்கு மேல் புள்ளிகள் வழங்கப்படுகின்றதெனவும், அடிப்படை/ நுழைவுத் |

| | | |
|---|---|---|
| | அவ்வாறு கூடுதலாக 1 புள்ளி வழங்கப்படவில்லை. | தேவைப்பாடுகளுக்கு எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் பிரகாரம் ஒரு விண்ணப்பதாரரர் 26(1)(அ) பிரிவுடன் தகுதி பெற்றிருந்தால், அதை இருமுறை பரிசீலிக்க முடியாது. |
| (iv) | மேற்படி நோமுகப்பரீட்சை தலைவர் உட்பட 7 பணிப்பாளர்களால் நடாத்தப்பட்டிருந்தது. சில பணிப்பாளர்கள் 3 விண்ணப்பதாரர்களுக்கும் ஒரே புள்ளிகளை அளித்துள்ளனர், ஏனைய பணிப்பாளர்கள் 1 விண்ணப்பதாரரிற்கு அதிகபட்ச புள்ளிகளை வழங்கியுள்ளனர். மேலும், சில விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப்பரீட்சையில் கொடுக்கப்பட்ட புள்ளிகள், அவர்களின் விண்ணப்பங்களின் பாட அறிவு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுடன் கேள்விக்குரியதாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரரின் பாட அறிவுக்கு ஒரு பணிப்பாளர் 18 புள்ளிகளை வழங்கியிருந்தார். எனினும், சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் தகவல் தொழில்நுட்பம், நிதி மற்றும் சந்தைப்படுத்தல் அனுபவம் தொடர்பான விபரங்கள் காணப்படவில்லை, எனவே, பாட அறிவுக்கான 20 இல் 18 புள்ளிகளை வழங்குவது கேள்விக்குரியதாக உள்ளது. | நேர்முகப்பரீட்சைக் குழுவில் திரு. நீல் பண்டார ஹபுஹின்ன (சமுர்த்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு செயலாளர்) மற்றும் தலைவர் உட்பட பிரதேச அபிவிருத்தி வங்கியின் 06 பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக இருந்தனர். பகுத்தறிவு முறையில் புள்ளிகள் சுயாதீனமாக வழங்கப்பட்டுள்ளன. |

**பின்னிணைப்பு 01**

| பொதுப் பேரேட்டுக் கணக்கு | விபரம் இல. | கிளை | தொகை (ரூபா) | முகாமைத்துவத்தின் பதில் |
|---|---|---|---|---|
| ஸ்வசக்தி மானியக் கணக்கு | 1 | வலகெதர | 30,000 | நிறைவேற்றுக் கடன் குழுவிடம் அங்கீகாரத்தை பெற்று சீர்செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| | 2 | அகலவத்த | 90,000 | |
| | 3 | பாணந்துறை | 225,000 | |
| | 4 | ஹொரணை | 550,000 | |
| | 5 | களுத்துறை | 20,000 | |
| | 6 | மொரகஹஹேன | 17,500 | |
| | 7 | இமதூவ | 30,000 | |
| | 8 | திஸ்ஸமஹாராம | 200,000 | |
| | 9 | தங்கல்லே | 270,000 | |
| | 10 | வலஸ்முல்ல | 270,000 | |
| | 11 | றன்னா | 10,000 | |
| | 12 | கராப்பிட்டிய | 171,750 | |
| | 13 | களுவெல்ல | 10,000 | |
| | 14 | கிதுல்கல | 180,000 | |
| | 15 | இரத்தினபுரி | 10,000 | |
| | 16 | கிரியெல்ல | 28,000 | |
| | 17 | புளுங்குபிட்டிய | 90,000 | |
| | 18 | கம்போல | 10,000 | |
| | 19 | லக்கல | 180,000 | |
| | 20 | ரத்தோட்டை | 60,000 | |
| | 21 | தவுலகல | 40,000 | |
| | 22 | பேராதனை | 60,000 | |
| | 23 | பசர | 40,000 | |
| | 24 | வெலிமடை | 10,000 | |
| | 25 | ரிதீமாலியத்த | 40,000 | |
| | 26 | பண்டாரவளை | 133,000 | |
| | 27 | மீகஹகிவுல | 100,000 | |
| | 28 | போகஹகும்புர | 50,000 | |
| | 29 | திருகோணமலை | 50,000 | |
| | 30 | முந்தல் | 30,000 | |
| | 31 | போகஸ்வெவ | 10,000 | |
| | 32 | கனகராயன்குளம் | 1,341,500 | |
| | **மொத்தம்** | | **4,356,750** | |
| மீட்டெடுக்கக்கூடிய மீள்நிரப்புச் செய்யும் களஞ்சிய கணக்கு | 1 | தலைமை அலுவலகம் (2017 முதல் 2020 வரையான மீதிகள் வந்திருந்தன) | 2,613,184 | எதிர்காலத்தில் குறிப்பிடப்பட்ட செலவினங்களை மீள்நிரப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2 | அனுராதபுரம் | 176,455 | இப்பிரச்னையை சீர்செய்வதற;கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | **Total** | | **2,789,639** | |
| கடன்பட்டோர் கணக்கு | 1 | அகலவத்தை | 101,900 | இது 2004.11.18 இல் இடம்பெற்ற கொள்ளையில் தவறவிடப்பட்ட தொகை காரணமாக நீண்டகால மீதியாக இருப்பதால், சொத்து பொறுப்பு முகாமைத்துவக் குழுவிடம் அங்கீகாரத்தை பெற்று சீர்செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| | 2 | நையுற்றிஸ் | 1,064,840 | இது 2006 ஆம் ஆண்டில் தங்க மோசடி திருத்தத்தின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு இழப்பீடாக செலுத்தப்பட்ட தொகையாகும். தற்போது, வழக்கு இல. பீஆர் 4330 இன் கீழ் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| | 3 | ஆனமடுவ | 202,097 | இந்த தொகையை சொத்து பொறுப்பு முகாமைத்துவக் குழுவிடம் அங்கீகாரத்தை பெற்று சீர்செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| | **மொத்தம்** | | **1,368,837** | |
| கடன்பட்டோர் மீதி – தலைமை அலுவலகம் | 1 | 2018 | 24,750 | சொத்துப் பொறுப்பு முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரததை பெற்றுக்கொள்வதன் மூலம் சிக்கலைச் சீரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | 2 | 2019 | 74,603 | சொத்துப் பொறுப்பு முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதன் மூலம் சிக்கலைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | 3 | 2021 | 13,829,414 | 2011 இன் 23 ஆமட் இலக்க TAC சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் TAC மேன்முறையீட்டு நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக Y/A 2016/2017 தொடர்பான வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு (TAC) இந்தத் தொகை செலுத்தப்பட்டது. நாங்கள் TAC இடமிருந்து உறுதிமொழியைப் பெற்றவுடன் இந்தத் தொகையை ஈடுசெய்யலாம். |
| | **மொத்தம்** | | **13,928,767** | |
| **கூட்டுமொத்தம்** | | | **22,443,993** | |

பின்னிணைப்பு 02

| | விபரம் | கொள்வனவு திகதி | கொள்வனவு பெறுமதி (ரூபா) | பதில் |
|---|---|---|---|---|
| 1 | E&W தகவல் முறைமை | 1/21/2008 | 3,397,100 | **குறிப்பு 1**<br>LDB வங்கி 2007 இல் ஈவிஸ் இன்போர்மேஷன் முறைமையிலிருந்து முக்கிய வங்கி தீர்வையை (BancMate) கொள்வனவு செய்திருந்ததுடன் 2019 ஏப்ரலில் LDB RDB ஒருங்கிணைப்பு வரை அதைப் பயன்படுத்தியது. RDB இன்ரலெக்ற் CBS முறைமையைப் பயன்படுத்துவதால், LDB செயற்பாட்டின் போது BancMate முறைமையில் இயங்கும் கணக்குகள் RDB CBS இற்கு இடம்பெயர்ந்ததுடன் BancMate முறைமை நேரடி செயற்பாட்டில் இருந்து நிறுத்தப்பட்டது. எனினும், இடம்பெயர்ந்த கணக்குகளில் கடந்த கால கொடுக்கல்வாங்கல் விபரங்களைப் பெற, BancMate முறைமையின் நகலை காப்பகப் பயன்முறையில் வங்கி பயன்படுத்துகிறது.<br>உருப்படிகள் BancMate மற்றும் தொடர்புடைய சேவைகள் மற்றும் உரிமங்கள் தொடர்பான கொடுப்பனவுகளாக இனங்காணப்படுகின்றன. இந்த முறைமையின் விற்பனையாளருடன் AMC ஒப்பந்தங்கள் நிறுத்தப்பட்டிருப்பதாலும், தீர்வு RDB செயற்பாடுகளுக்குத் தனிப்பயனாக்கப்படாததாலும், அதை இனி நேரடி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த முடியாது. எனவே, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவின் பரிந்துரையுடன் அடுத்த ஆண்டுக்கு முன்னர் சொத்து மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 2 | E-W தகவல் முறைமை | 1/2/2009 | 849,275 | |
| 3 | NTPL முறைமை – கிரயம் | 12/31/2010 | 5,893,230 | |
| 4 | NTPL முறைமை – கிரயம் | 12/31/2010 | 2,954,000 | |
| 5 | Imp இன் சான்றுபடுத்தல் | 6/13/2005 | 1,150,000 | **குறிப்பு 2**<br>2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் LDB வங்கி DMS சொப்ற்வெயார் ரெக்னாலஜீஸ் உருவாக்கிய மென்பொருள் தீர்வை வங்கிச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தியது. இது 2007 இல் BancMate முறைமையை கையகப்படுத்தியதன் மூலம் செயற்பாட்டில் இருந்து நிறுத்தப்பட்டது.<br>உருப்படிகள் DMS மென்பொருள் தீர்வு மற்றும் தொடர்புடைய சேவைகள் மற்றும் உரிமங்கள் தொடர்பான கட்டணங்களாக இனங்காணப்படுகின்றன. இந்த முறைமையின் விற்பனையாளருடன் AMC ஒப்பந்தங்கள் நிறுத்தப்பட்டிருப்பதாலும், தீர்வு RDB செயற்பாடுகளுக்குத் தனிப்பயனாக்கப்படாததாலும், அதை இனி நேரடி |
| 6 | தானியங்கி முக்கிய வங்கி | 8/30/2006 | 1,000,000 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த முடியாது. எனவே, அடுத்த ஆண்டுக்கு முனனர் சொத்து மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 7 | தரவு மாற்றம், வாடிக்கையாளர் | 1/31/2007 | 250,000 | **குறிப்பு 3**<br>இந்த உருப்படிகள் DMS மென்பொருள் தீர்வு (குறிப்பு 02) இலிருந்து BancMate முக்கிய வங்கி முறைமைக்கு (குறிப்பு 01) தரவு இடம்பெயர்வுக்காக DMS இற்கு செலுத்தப்பட்ட ஒரு முறை சேவை ஆதரவுக் கட்டணமாக இனங்காணப்பட்டது. எனவே, P&L இற்கு மீள பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 8 | mil பூர்த்தி செய்தல் தொடர்பாக | 1/31/2007 | 875,000 | |
| 9 | விண்டோஸ் ரேர்மினல் சேர்வர் | 1/31/2007 | 226,492 | **குறிப்பு 4**<br>தொலைதூர கிளைகளில் இருந்து DMS மென்பொருள் தீர்வை (குறிப்பு 02) அணுகுவதற்கு LDB முதலில் வின்டோஸ் ரேர்மினல் சேர்வர் 2003 உரிமத்தைப் பயன்படுத்தியது. ஆனால் BankMate (குறிப்பு 01) ஆனது இணைய உலாவியில் தொலைவிலிருந்து முறைமையை அணுகும் வகையில் உருவாக்கப்பட்டது. எனவே, BankMate முறைமைகளை செயற்படுத்தியவுடன் விண்டோஸ் ரேர்மினல் சேர்வர் நேரடி செயற்பாட்டில் இருந்து நிறுத்தப்பட்டது. விண்டோஸ் ரேர்மினல் சேர்வர் 2003 உரிமம் அதன் ஆயுட்காலத்தின் முடிவில் இருந்த விண்டோஸ் 2003 சேர்வர் பதிப்போடு தொடர்புடையது. எனவே, விண்டோஸ் ரேர்மினல் சேர்வர் 2003 உரிமங்களை இனி பயன்படுத்த முடியாது. எனவே, அடுத்த ஆண்டுக்கு முன்னர் சொத்து மீதிகளை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 10 | polo இற்கான உரிமக் கட்டணம் (பொலன்னறுவை) | 3/27/2007 | 500,000 | குறிப்பு 01 ஐ போன்றது |
| 11 | மைல்களின் பூர்த்திசெய்தல் | 4/10/2007 | 250,000 | |
| 12 | திபஸ் மும்மொழி தீர்வு | 5/29/2007 | 17,500 | **குறிப்பு 05**<br>திபஸ் மும்மொழி தீர்வு பதிப்பு வங்கியானது வன்பொருள் விசை அடிப்படையிலான (Parallel Port) தீர்வாக இருந்தது, இது நவீன PC இயக்க முறைமைகள் மற்றும் வன்பொருளுடன் பொருந்தாது. காலாவதியான தொழில்நுட்பத்தை இனி பயன்படுத்த முடியாது. எனவே, அடுத்த ஆண்டுக்கு முன்னர் சொத்து மீதியை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | polo இற்கான உரிமக் கட்டணம் (பொலன்னறுவை) | 9/24/2007 | 500,000 | **குறிப்பு 01 போன்றது** |
| 14 | திபஸ் மும்மொழி தீர்வு | 6/3/2005 | 46,500 | **குறிப்பு 05 போன்றது** |
| 15 | அக்ரோனிஸ் ட்ரூ இமேஜ் | 1/28/2008 | 460,920 | **குறிப்பு 06**<br>"அக்ரோனிஸ் ட்ரூ இமேஜ்" என்பது LDB ஒரு பக்க முறைமை காப்பு பிரதிகளை எடுப்பதற்கு பயன்படுத்திய பயன்பாட்டு மென்பொருளாகும். உருப்படி இல. 15 முதல் 19 வரை, அக்ரோனிஸ் பயன்பாட்டு மென்பொருள் உரிமங்கள் மற்றும் தொடர்புடைய கொடுப்பனவுகள் தொடர்பான கொடுப்பனவுகளாக இனங்காணப்பட்டுள்ளன. LDB இந்த மென்பொருளை 2015 இல் VEEM காப்புப் பிரதி மென்பொருளுடன் மாற்றியது. LDB உடன் பதிப்பு தற்போது காலாவதியானதுடன் இனி பயன்படுத்த முடியாது. எனவே, அடுத்த ஆண்டுக்கு முன்னர் சொத்து மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 16 | அக்ரோனிஸ் பராமரிப்பு | 1/28/2008 | 92,184 | |
| 17 | அக்ரோனிஸ் மீடியா பக் | 1/28/2008 | 6,000 | |
| 18 | அக்ரோனிஸ் ட்ரூ இமேஜ் | 1/28/2008 | 137,954 | |
| 19 | அக்ரோனிஸ் மெய்ன் ட்ரூ | 1/28/2008 | 27,600 | |
| 20 | தரவு சமர்ப்பிப்பு DMS | 3/27/2008 | 215,625 | **குறிப்பு 03 போன்றது** |
| 21 | முறைமை ஏ இற்கான கட்டணம் | 5/2/2008 | 1,150,000 | **குறிப்பு 07**<br>முறைமை/ சொத்தை இனங்காண்பதற்கு வழங்கப்பட்ட விபரங்கள் போதுமானதாக இருக்கவில்லை. |
| 22 | தரவு இடம்பெயர்வு fr | 6/30/2008 | 344,655 | **குறிப்பு 03 போன்றது** |
| 23 | ஈ-விஸ் தகவல் முறைமை | 7/10/2008 | 3,397,100 | **குறிப்பு 01 போன்றது** |
| 26 | தொழில்முறை கட்டணங்கள் FO | 12/30/2015 | 336,000 | **குறிப்பு 08**<br>இது தொழில்முறை சேவைக்கான ஒரு முறை கொடுப்பனவாக தெரிகிறது. எனவே, P&L இற்கு மீள பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் |
| 27 | PGC டெஸ்க்ரொப் தொழில்முறை | 1/18/2010 | 41,448 | **குறிப்பு 09**<br>CRIB இற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஓ∴ப்லைன் தரவுக் கோவை குறியாக்க PGP டெஸ்க்ரொப் தொழில்முறை பயன்பாடு பயன்படுத்தப்பட்டது. CRIB இற்கு ஒன்லைன் கோவை சமர்ப்பிப்பு செயன்முறையை வங்கி பூர்த்தி செய்த பின்னர் PGP பயன்பாட்டுக்கான தேவை உயர்த்தப்படவில்லை. LDB உடன் PGP டெஸ்க்ரொப் தொழில்முறை பதிப்பு தற்போது காலாவதியாகியதுடன் நவீன டெஸ்க்ரொப் இயக்க முறைமைகளில் இனி பயன்படுத்த முடியாது. எனவே, அடுத்த ஆண்டுக்கு முன்னர் சொத்து மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | பயன்பாட்டு மென்பொருள் | 3/1/2012 | 1,025,000 | **குறிப்பு 07 போன்றது** |
| 29 | விண்டோஸ் சேர்வர் ஸ்டாண்டா | 1/22/2014 | 851,558 | **குறிப்பு 10**<br>உரிமத்திற்கான சரியான கொடுப்பனவை இனங்காண்பதற்கு வழங்கப்பட்ட விபரங்கள் போதுமானதாக இருக்கவில்லை. எனினும், LDB வங்கியிலிருந்து மாற்றப்பட்ட அனைத்து வின்டோஸ் சேர்வர் ஒப்பரேற்றிங் முறைமை உரிமங்களையும் வங்கி ஏற்கனவே பயன்படுத்தியிருந்தது. |
| 33 | வீம் பக்கப் & ரிப்பிளிக்கேஷன் | 12/30/2015 | 113,735 | **குறிப்பு 11** |
| 34 | வீம் பக்கப் & ரிப்பிளிக்கேஷன் | 12/30/2015 | 113,735 | ”VEAM BACKUP & REPLICATION” என்பது முதன்மை தரவு மையம் மற்றும் DR தளத்திற்கு இடையே உள்ள LDB முறைமைகளை on-site காப்புப்பிரதிக்கு கூடுதலாக ஒத்திசைக்கப் பயன்படுத்தப்படும் காப்பு மற்றும் பிரதி கருவிகளின் தொகுப்பாகும். LDB 2015 முதல் 2022 வரை கருவிகளுக்கான 05 வருட சந்தாக்களைக் கொண்டிருந்தது. LDB RDB ஒருங்கிணைப்புடன், தரவு நகர்த்தலை பூர்த்தி செய்த பின்னர் LDB தரவு மையங்கள் மூடப்பட்டன. எனவே, இந்த கருவிகளுக்கான சந்தாவை வங்கி புதுப்பித்திருக்கவில்லை, ஏனெனில் RDB ஒரே நோக்கத்திற்காக ஒரு தனி கருவிகளின் தொகுதியை பயன்படுத்துகிறது. எனவே, அடுத்த ஆண்டுக்கு முன்னர் சொத்து மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 79 | வீம் பக்கப் & ரிப்பிளிக்கேஷன் | 12/30/2015 | 113,735 | |
| 80 | கண்காணிப்பு முறைமை fo | 6/24/2016 | 771,899 | **குறிப்பு 12**<br>LDB அவர்களின் சொந்த தலைமை அலுவலக வளாகத்தில் தங்களுடைய சொந்த தரவு மையத்தை பேணி வருகிறது. எனவே, அவர்கள் தரவு மையத்தை கண்காணிப்பதற்கு ஒரு தீர்வை கொள்வனவு செய்துள்ளனர். LDB RDB ஒருங்கிணைப்புடன், தரவு நகர்த்தலை பூர்த்தி செய்த பின்னர் LDB தரவு மையங்கள் மூடப்பட்டன. RDB தரவு மையங்கள் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் & டயலொக் தொழில்துறை மட்ட தரவு மையங்களில் அறிமுகப்படுத்தப்படுவதால், தனியான தரவு மைய கண்காணிப்பு முறைமை தேவைப்படவில்லை. எனவே, LDB இன் கண்காணிப்பு முறைமைக்கான AMC மற்றும் ஆதரவு உடன்படிக்கைகள் தொடரப்படவில்லை. எனவே, அடுத்த ஆண்டுக்கு முன்னர் சொத்து மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| **மொத்தம்** | | | **27,108,245** | |

**பின்னிணைப்பு 03**

| இல. | கொள்வனவு திகதி | விபரம் | கிரயம் (ரூபா) | பதில் |
|---|---|---|---|---|
| 1 | 2012 ஒக்தோபர் 18 | SYMC வலை காப்பு பிரதி பிளற்போம் | 9,089,963 | தரவு காப்புப்பிரதிக்கு பயன்படுத்தப்படும் காப்புப்பிரதி தீர்வு. உரிமம் காலாவதியானதுடன் தற்போது பயன்பாட்டில் இல்லை. |
| 2 | 2015 செப்தெம்பர் 14 | BIT*64 ஆங்கில DVD திருத்தம் | 111,555 | இது ஒரு திருத்தப் பதிவாகும், அடுத்த ஆண்டுக்கு முன்னர் சொத்து மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 3 | 2017 மார்ச் 29 | வைரஸ் தடுப்பு மென்பொருளுக்கான இறாக்கை சேர்வர் | 751,992 | வைரஸ் தடுப்பு சேவையகத்தை நிறுவுவதற்கு சேர்வர் பயன்படுத்தப்பட்டது. உரிமம் காலாவதியானதால் வைரஸ் தடுப்பு மென்பொருள் மாற்றப்பட்டுள்ளது. எனினும், சேவையகம் ஏனைய நோக்கங்களுக்காக வங்கியால் பயன்படுத்தப்படுகிறது. |
| 4 | 2019 மார்ச் 1 | கணக்காய்வுக் கருவி மென்பொருள் | 2,173,113 | உள்ளக கணக்காய்வு பிரிவால் மென்பொருள் பயன்படுத்தப்பட்டதுடன் உரிமம் காலாவதியானதால் தற்போது பயன்பாட்டில் இல்லை. |
| 5 | 2022 மே 24 | ESET வைரஸ் தடுப்பு உரிமங்கள் 2500 | 718,750 | உரிமம் காலாவதியாகியுள்ளது. புதிய வைரஸ் தடுப்பு மென்பொருள் ஒன்று பயன்பாட்டில் உள்ளது. |
| | **மொத்தம்** | | **12,845,373** | |